02-05-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : சிரியா: புனையப்படும் கதைகளும் தெரியவேண்டிய உண்மைகளும்**

"அரபு வசந்தம்" என்ற போர்வையில் லிபியாவில் தாம் விரும்பிய ஆட்சி மாற்றத்தைச் செய்ததுபோல சிரியாவிலும் செய்ய அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் நினைக்கின்றன. ஆனால் லிபியா போல் சிரியா இலகுவானதாக இல்லை.

சிரியாவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த அமெரிக்காவின் அடியாளாக சவூதி அராபியா செயற்படுகிறது. சவூதி அராபியா ஏதோ புனிதக் கடமையில் ஈடுபடுவது போல மேற்குலக ஊடகங்கள் எழுது உலகெங்கும் பிரச்சாரம் செய்கிறார்கள். இன்று மத்திய கிழக்கில் மக்கள் நலன்களுக்கு பெரிய குறுக்கீடாக இருப்பது சவூதி அராபியா ஆகும். அமெரிக்காவின் அடியாளாக மத்தியகிழக்கைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க சவூதி அராபியா விரும்புகிறது. அதற்குப் பெரிய தடையாக இருப்பவற்றில் ஈரானும் சிரியாவும் பிரதானமானவை.

அரசுக்கெதிரான மக்கள் எழுச்சிகள் வழமையிற் பெருநகரங்களில் நிறைவான மக்கள் எழுச்சியுடனேயே தொடங்குவது வழமை. ஆனால் சிரிய அரசாங்கத்திற்கெதிரான ஆயதப் போராட்டம், ஜோர்டானுடனான எல்லையில் உள்ள டாரா என்ற சிறிய நகரில் 2011 மார்ச்சில் தொடங்கியது. சில காலம் பின்னர் சிரிய எதிர்குழுக்குளுக்கு ஜோர்டானுக்கூடாக ஆயதம் அனுப்பியதை சவூதி அராபியா ஒப்புக் கொண்டது.

அமெரிக்காவும் அதன் நேட்டோக் கூட்டாளிகளும் தன்னெழுச்சியான மக்கள் எழுச்சிகளைத் தங்கள் தேவைகட்குப் பயன்படுத்திக் கொண்டனர்;. சிரியாவின் ஆயதக் கிளர்ச்சிக்கு சிரிய அரசாங்கம் பதிலளித்த வேளை, அரபு லீகும் ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் சிரிய அரசாங்கம் மக்கள் எழுச்சிக்கெதிராக வன்முறையைப் பிரயோகிக்கிறது என்று காரணங் காட்டிப் பொருளாதாரத் தடைகளை விதித்தன.

இன்று சிரிய எதிர்க்கட்சிகளின் "சிரிய தேசியக் கவுன்சிலில்" இருப்பவர்கள், அமெரிக்க நிதியுதவி பெறும் புலம்பெயர்ந்த சிரியர்களே. சிரியாவின் ஆட்சிமாற்றம் அமெரிக்க நலன்களுக்காகவே என அவர்கள் வெளிப்படையாகவே அறிவிக்கிறார்கள்.

> சிரியாவில் மனித உரிமை மீறல்களைப் பற்றி வாய்கிழியப் பேசும் சவூதி அராபியாவிற் தான் குற்றவாளிகளின் கைகளைத் துண்டிப்பதும் அவர்களைக் கல்லெறிந்து கொல்வதும் நடைபெறுகின்றன. அங்கு தேர்தல்கள் இல்லை. மன்னராட்சி நடைபெறுகிறது. பெண்களுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகிறன. ஜனநாயகம் என்ற பேச்சிற்கே அங்கு இடமில்லை.

துருக்கி, அமெரிக்காவின் சேவகனாக சிரியாவின் ஆட்சி மாற்றத்திற்காக வேலை செய்கிறது. "சிரிய விடுதலை இராணுவத்தின்" பயிற்சித் தளங்களும் இராணவத் தளங்களும் துருக்கியில் உள்ளன. அவற்றுக்கான நிதியுதவி சவூதி அராபியாவாலும் கட்டாராலும் வழங்கப்படுகிறது. அந்த இராணுவத்திற் பல வெளிநாட்டவர்கள் இணைந்துள்ளமை ஆதாரங்களுடன் நிறுவப்பட்டிருக்கிறது.

நேட்டோ போர் விமானங்கள் சிரிய எல்லையில் உள்ள துருக்கி வான்படைத்தளத்தில் ஏராளமான ஆயுதங்களைக் குவிக்கின்றன. முஹம்மர் கடாஃபிக்கு எதிராகப் பயன்பட்ட ஆயுதங்களும் லிபிய இடைக்கால தேசிய கவுன்சிலின் ஆட்களும் அவ்விடத்திற்கு அனுப்பப்பட்டு "சிரிய விடுதலை இராணுவத்திற்குப்" பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்படுகின்றன.


சிரிய அரசாங்கத்தின் மீது பெரும் பழியைச் சுமத்தப் பயன்பட்ட ஹோல படுகொலைகளைச் செய்தது சிரிய அரச இராணுவமல்ல, "சிரிய விடுதலை இராணுவமே" என்பது சாட்சியங்களுடன் நிரூபணமாகியும் சிரிய அரசாங்கத்துக்கெதிரான பாரிய பொய்ப் பிரசாரம் உலகளாவிய ஊடகங்களால் முன்னெடுக்கப்படுகிறது.

**மிகுதி அடுத்த பக்கம்**

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

தாய்மொழி வழிக் கல்வி

க. ஆதித்தன் | 16-05-2013




குமுதினிப் படுகொலைகள்

**குமுதினிப் படுகொலைகள் அல்லது குமுதினி படகுப் படுகொலைகள் என்பது 1985 ஆம் ஆண்டு மே 15 ஆம் நாள்** நெடுந்தீவிற்கும் புங்குடுதீவிற்கும் இடையில் சேவையாற்றிய குமுதினிப் படகில் பயணம் செய்தவர்கள் கூட்டாகப் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வைக் குறிக்கும். நெடுந்தீவின் மாவலித்துறையில் இருந்து நயினாதீவின் குறிகாட்டுவான் துறைமுகத்திற்கு குமுதினிப் படகில் சென்ற பயணிகள் இலங்கை கடற்படையினரால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். குழந்தைகள், பெண்கள் உட்பட மொத்தம் 33 பேர் குத்தியும் வெட்டியும் கொல்லப்பட்டனர். முப்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் காப்பாற்றப்பட்டனர்.

நேரில் கண்டவர்களின் சாட்சியத்தின் படி, இலங்கை கடற்படையைச் சேர்ந்தவர்கள் என நம்பப்படும் ஆறு நபர்கள் படகில் ஏறினர். படகில் பயணம் செய்தவர்களை முன்னே வரும்படி அழைத்து ஒவ்வோருவரையும் தமது பெயர், வயது, முகவரி, எங்கு செல்கிறார்கள் போன்ற விவரங்களை உரத்துக் கூறும்படி பணிக்கப்பட்டார்கள். பின்னர் அவர்களை வாள்களாலும் கத்திகளாலும் வெட்டிக் கொன்றனர்

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

## சிரியா: புனையப்படும் கதைகளும் தெரியவேண்டிய உண்மைகளும்

முன்பக்கத் தொடர்ச்சி..

அதே வேளை, ஆவணப்படுத்தப்பட்ட "சிரிய விடுதலை இராணுவத்தின்" மனித உரிமை மீறல்கள் பற்றி யாரும் வாய் திறப்பதில்லை.

ஐ.நாவினதும் அரபு லீகினதும் பிரதிநிதியாக சிரிய விவகாரங்களுக்கான சிறப்புப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட கோஃபி அனான் முன்வைத்த போர்நிறுத்தத்தை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அசாத் அதை ஏற்க மறுத்ததாகவே ஊடகங்கள் சொல்லின. அனான் மௌனம் காத்தார். மேற்குலகு போர்நிறுத்தத்தை விரும்பவில்லை. ஏனெனில் லிபியா போன்றதொரு விரைவான ஆட்சி மாற்றத்தை அமெரிக்கா விரும்புகிறது.

இரண்டு ஆண்டுகள் கடந்தும் சிரியாவில் தான் விரும்பிய ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த அமெரிக்காவுக்கு முடியவில்லை. லிபிய அனுபவங்கள் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கு சில படிப்பினைகளைக் கொடுத்துள்ளன. அதனால், சிரியாவைப் பற்றி ரஷ்யாவும் சீனாவும் விழிப்பாயிருக்கின்றன. அமெரிக்கா இப்போது சிரிய விவகாரத்தில் வெளிப்படையாகவே ரஷ்யாவையும் சீனாவையும் மிரட்டுகிறது. ஆனால் அமெரிக்கா நினைப்பது போல உலகம் இல்லை என்பதை ரஷ்யாவும் சீனாவும் நிருபிக்கின்றன.

ஊடகங்கள் காட்டுவது போலன்றி, சிரியா, மதச் சகிப்புடைய மதச்சார்பற்ற பல்லின நாடாக நீண்டகாலமாகவே இருந்துவந்துள்ளது. அதன் ஜனாதிபதி அசாத் ஷியா பிரிவிற்குட்பட்ட அலவ்வி மதப் பிரிவினராயினும் அவரது மனைவி சுன்னி பிரிவினராவர். சிரியா கணிசமான எண்ணிக்கையிற் குர்தியர்களும் ஆமேனிய கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய நாடாகும். இன்று சிரியாவுக்குள் இன, மதப் பிரிவினைகளை ஏற்படுத்தி உள்நாட்டு யுத்தமொன்றை நடத்த ஏகாதிபத்தியம் துடிக்கிறது. சிரியாவில் ஆட்சி மாற்றத்திற்கான முயற்சி அதனுடன் சேர்ந்த ஒரு செயற்பாடாகும்.

சவூதி அராபியா சிரியாவில் ஆட்சி மாற்றத்தை வேண்டுகிறது. சவூதி அராபியாவின் பிராந்திய அதிகாரத்துக்குச் சவால் விடும் ஒரு நாடாக சிரியா இருப்பதும் சவூதி அராபியாவிற்கு கீழ்ப்படிய மறுக்கும் ஹிஸ்புல்லா, ஹமாஸ் இயக்கங்கட்கு சிரியா வழங்கிவந்துள்ள ஆதரவும் ஈரானுடனான சிரியாவின் நெருக்கமும் சவூதி அராபியாவிற்கு பாரிய தலையிடிகளை வழங்குகின்றன. அதனால், சவூதி அராபியா, சிரியாவில், அரபு வசந்தம் என்ற போர்வையை தனது வசதிக்காகப் போர்த்துக் கொள்கிறது. அதே அரபு வசந்தம் தனது மண்ணுக்கு வந்தபோது கொடிய இராணுவக் கரங்கொண்டு அடக்கிய சவூதி அராபியா, அண்டை நாடான பாஹ்ரேனில் மக்கள் எழுச்சி ஏற்பட்டபோது தனது இராணுவத்தை அனுப்பி அவ்வெழுச்சியை முளையிலே கிள்ளியது.

2011இல் அமெரிக்காவின் ஆயத விற்பனை 2012ம் ஆண்டை விட மும்மடங்கு கூடியுள்ளது. ஆயதம் வாங்கிய நாடுகளில் முதலிடத்தில் இருப்பது சவூதி அராபியா. அதேவேளை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் அதிகளவில் ஆயுதங்களை கடந்தாண்டு விற்றிருப்பது சவூதி அராபியாவிற்கே. குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றிய நாடுகட்கான ஆயத விற்பனைச் சட்டவிதிகளை மீறி சவூதி அராபியாவிற்கு ஆயுதங்கள் விற்கப்பட்டிருக்கின்றன.

சிரியாவில் மனித உரிமை மீறல்களைப் பற்றி வாய்கிழியப் பேசும் சவூதி அராபியாவிற் தான் குற்றவாளிகளின் கைகளைத் துண்டிப்பதும் அவர்களைக் கல்லெறிந்து கொல்வதும் நடைபெறுகின்றன. அங்கு தேர்தல்கள் இல்லை. மன்னராட்சி நடைபெறுகிறது. பெண்களுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகிறன. ஜனநாயகம் என்ற பேச்சிற்கே அங்கு இடமில்லை. அரசியல் கட்சிகள் தடைசெய்யப்பட்டுள்ளன. 60% மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிறார்கள்.

இந்த சவூதி அராபியாவைத் தான் நமது ஊடகப் புலிகள் போற்றிப் புகழ்கிறார்கள்.

இதே சவூதி அராபியா தான் உலகெங்கும் வஹாபி, ஸலாஃபி முஸ்லிம் குழுக்களை அனுப்புகிறது. உலகெங்கும் இஸ்லாமியத் தீவிரவாதத்தை வளர்க்கிற அதே வேளை, அவை முஸ்லீம் மக்களைப் பிளவுபடுத்துகின்றன. ஏகாதிபத்தியத்திற்கு உவப்பான வேலையை, அதாவது முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதை, சவூதி அராபியா அமெரிக்காவிற்காகச் செய்கிறது.

இவை பேசப்படுவதில்லை, ஆனால் இவை கவனிக்கப்பட வேண்டியவை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விரிவாக்கத்திற்கும் குறிப்பாக மத்திய கிழக்கில் அதன் கை ஓங்குவற்கு கூட்டுக் களவானியான அடியாள் வேலையை சவூதி அராபியா பார்க்கிறது. உலகெங்கும் இஸ்லாமியத் தீவிரவாதத்தை ஊட்டி வளர்ப்பதன் மூலம் 'நாகரிகங்களிடையிலான மோதல்" என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் உலகெங்கும் அமெரிக்கா போர்தொடுக்க சவூதி அராபியா களம் அமைத்துக் கொடுக்கிறது.




**தாய் மொழி வழிக் கல்வி**
**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)**

1. கல்வி பற்றிய கருதுகோள்களும் கல்வித்துறையின் சமகால நிலையும்
2. தாய்மொழி மூலக் கல்வி பற்றி கல்வியியலாளர்களதும் சிந்தனையாளர்களதும் கருத்துகள்
3. இலங்கையில் தாய்மொழி மூலக் கல்வியின் வரலாறும் விளைவுகளும்
4. தாய் மொழி மூலக் கல்வி நிராகரிக்கப்படுவதன் காரணங்கள்
5. தீர்வாக முன்வைக்கப்படும் 'இரண்டாவது மொழி' யோசனை.



சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
CC BY NC SA